International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சைவ சித்தாந்த சாத்திரங்கள் – கொடிக்கவி

**முனைவர் கி. துர்காதேவி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர்ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 117

**ஆய்வுச் சுருக்கம்:** சைவ சித்தாந்த சாத்திரங்கள் - கொடிக்கவி - சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான 'கொடிக்கவி' நூலின் சிறப்புகளையும் விரிவாக விளக்குகிறது.

**சைவ சித்தாந்தம்:** சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு, வேதாகமங்களை அடிப்படையாகக் கொண்டது. இது பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளை) ஆகிய முப்பொருள் உண்மைகளை விளக்குகிறது. மெய்கண்டார் அருளிய 'சிவஞான போதம்' தொடங்கி உமாபதி சிவச்சாரியார் அருளிய 'கொடிக்கவி' வரை 14 நூல்கள் சைவ சித்தாந்தத்தின் சாரமாகத் திகழ்கின்றன.

கொடிக்கவி சிறப்பம்சங்கள்: உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட இந்நூல், தில்லையில் கொடியேற்றத் தடை ஏற்பட்டபோது பாடப்பட்டது. இது வெறும் நான்கு பாடல்களைக் கொண்ட மிகச் சிறிய நூல் என்றாலும், சைவ சித்தாந்தத்தின் உட்கருத்துக்களை ஆழமாகப் பேசுகிறது. வீடுபேறு அடைய தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் ஆகிய நான்கு நெறிகளைச் சைவ சித்தாந்தம் போதிக்கிறது

**முதன்மைச் சொற்கள்**

சைவ சித்தாந்த சாத்திரங்கள் - நூல்கள் – பதி, பசு, பாசம் விளக்கம் – கொடிக்கவி

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு, வேதங்கள் மற்றும் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் ஒரு தத்துவப் பிரிவே சைவ சித்தாந்தம் ஆகும். ஆன்மா, இறைவன், உலகம் ஆகிய முப்பொருள் தத்துவங்களை விளக்கி, "சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை" என்று பொருளை விளக்குவதே சைவ சித்தாந்தமாகிறது.

**சைவ சித்தாந்தத்தின் முக்கியக் கூறுகள்**

ஆன்மாவின் விடுதலைக்கு வழிவகுக்கும் தத்துவங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளை வழங்கும் சைவ சித்தாந்தத்தின் முக்கிய கூறுகளாக பதி, பசு, பாசம் விளங்குகிறது.

**பதி (கடவுள்)**

சைவ சித்தாந்தத்தின்படி, கடவுள் எங்கும் இருப்பவர். உலகம் முழுவதும் மற்றும் அதற்கு அப்பாலும் நிறைந்தவர் என்று கூறப்படுகிறது.

**பசு (ஆன்மா)**

சைவ சித்தாந்தத்தில், ஆன்மா என்பது உயிர் என்று கூறப்படுகிறது, இது இறைவனிடம் இருந்து வருகிறது.

**பாசம்**

பாசம் என்பது, ஆன்மாக்கள் இறைவனிடமிருந்து விலகிச் செல்லக் காரணமாக இருக்கும் ஒன்றாகக்

கருதப்படுகிறது.

### சைவ சித்தாந்தத்தின் முக்கிய நூல்கள்

திருமந்திரம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன் போன்றவைகள் ஆகும்.

### திருமந்திரம்

சைவ சித்தாந்தத்தின் சாரம் என்றும் கருதப்படும் திருமந்திரம் திருமூலரால் எழுதப்பட்ட நூலாகும். சிவமே அன்பு, அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. இந்நூல் தமிழ் ஆகம நூல் என்றும் தமிழ் மூவாயிரம் என்றும் அழைக்கப்படுகிறது. திருமந்திரர் திருமந்திர மாலை என்பார்.

திருமந்திரம் 9 உட்தலைப்புகளைக் கொண்ட பாயிரமும் அதனை அடுத்து தந்திரம் என்று அழைக்கப்படும் ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டது. கலிவிருத்தப் பாக்களால் அமைந்து உள்ளது. திருமந்திரத்தில் 232 அதிகாரங்கள், 3100 செய்யுட்கள் உள்ளன.

### சிவஞானபோதம்

சைவ சித்தாந்தத்தின் முக்கிய நூல்களில் ஒன்று, இது சிவஞானத்தை அடைவதற்கான வழிகளை விளக்குகிறது. கி.பி 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும், திருவெண்ணெய் நல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தவருமான மெய்கண்டார் அருளிய மெய்கண்ட சாத்திரங்களில் மிக முக்கியமானதும், தலை சிறந்ததுமாக சிவஞான போதம் விளங்குகிறது. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை ஒழுங்கு முறையாக இந்நூல் எடுத்துரைக்கிறது.

சிவபெருமானைப் பற்றிய ஞானத்தை உணர்த்தும் நூல் சிவஞானபோதம் எனப்படும். இரண்டு அதிகாரங்கள், நான்கு இயல்கள், பன்னிரண்டு சூத்திரங்கள் என இந்நூல் பகுக்கப்பட்டுள்ளது.

### சிவஞான சித்தியார்

சைவ சித்தாந்தத்தின் மற்றொரு முக்கிய நூல், இது ஆன்மாவின் விடுதலையை விளக்குகிறது. அருணந்தி சிவாசாரியாரால் எழுதப்பட்ட சிவஞான சித்தியார் சைவ சித்தாந்தக் கொள்கைகளில் 95 விழுக்காடு உள்ளதால்,

**சிவனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை**

**சித்தியாருக்கு மிஞ்சிய சாத்திரமும் இல்லை.**

எனப் போற்றப்பட்டது. சைவ சித்தாந்த ஞானசாத்திரங்களில் இந்நூல் அளவால் மிகப் பெரியதாகும். சிவஞான சித்தியார் 328 திருவிருத்தங்கள் கொண்ட சுபக்கம், 301 திருவிருத்தங்கள் பரபக்கம் என்ற இரு பகுதிகளை உடையது. சிவஞானபோதம் போலவே இதுவும் 12 சூத்திரங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. சிவஞானபோதத்திற்குச் செய்யுள் வடிவில் அமைந்துள்ள ஓர் அரிய உரைநூலாகச் சிவஞானசித்தியாரைக் கூறலாம்.

சுபக்கம் - அரிய பெரிய சைவ சித்தாந்த நுண்பொருளை விளக்குகிறது. இது சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களை விரித்து, சைவ சமய கொள்கைகளை விளக்குகிறது.

பரபக்கம் - பிற சமயக் கருத்துகளை எடுத்துக் கூறி, அவற்றைக் காரண காரியத்தோடு மறுக்கிறது. சைவ சித்தாந்தத்திற்கு முரணான பிற சமயக் கொள்கைகளை மறுத்து, சைவ சித்தாந்தக் கொள்கைகளை நிலைநிறுத்துவதே இதன் நோக்கம்.

இந்நூலுக்கு ஞானப்பிரகாசர், வெள்ளியம்பலத் தம்பிரான் சுவாமிகள், நிரம்ப அழகிய தேசிகர், மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகிகள், சிவஞான யோகிகள் போன்றோர் உரை எழுதியுள்ளனர்.

### இருபா இருபஃது

அருணந்தி சிவாசாரியாரின் மற்றொரு நூலாகும். பத்துப் பத்துச் செய்யுள்களைக் கொண்ட ஆசிரியப்பா, வெண்பா ஆகிய இரண்டு வகை யாப்புகளில் அமைந்த 20 செய்யுளால் ஆனது. மெய்கண்டாரைச் சிவபெருமானாகவே கருதிச் செய்யப்பட்ட இந்நூலில், சிவஞானசித்தியாரில் கூறப்படாத சில சிந்தனைகளை வினாக்களாக எழுப்பி, விடைகளை உள்ளடக்கி, செய்யுள் நடையில் இதனை அமைத்திருக்கும் முறை மிகச் சிறப்புடையதாகும்.

இந்நூலுக்குச் சீர்காழித் தத்துவநாதர், மதுரைச் சிவப்பிரகாசர், நமச்சிவாயத் தம்பிரான் போன்றோர் உரை எழுதியுள்ளனர்.

### உண்மை விளக்கம்

உண்மை விளக்கம் என்ற நூல் திருவதிகை மனவாசகங்கடந்தாரால் இயற்றப்பட்டது. குருநாதர் தனது சீடருக்கு உண்மை என்னவென்று விளக்குவதால் "உண்மை விளக்கம்" எனப் பெயர் பெற்றது. இவர் மெய்கண்டாரின் மாணவர். இந்த நூல் 53 வெண்பாக்களால் ஆனது. இந்நூல் ஆன்ம தத்துவம், ஆணவம், கன்மம், மாயை போன்ற தத்துவங்களை சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் நிலையில் வினாவிடை முறையில் விளக்குகிறது. இந்நூலை முதலில் படித்துவிட்டுப் பின்னர் மற்றவற்றைப் படித்தால் சைவ சித்தாந்தத்தின் பொருள்கள் விளங்கிக் கொள்ள எளிதாக இருக்கும்.

### சிவப்பிரகாசம்

இந்நூல எழுதியவர் உமாபதி சிவாச்சாரியார் ஆவார். இந்த நூலில் சைவ சித்தாந்தக் கோட்பாடுகள் நூறு விருத்தப் பாடல்களால் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் சைவ சித்தாந்தத் தின் அடிப்படைக்கோட்பாடுகளைப் போதிக்கிறது.

வடமொழி உபநிடதக் கருத்துக்களை இந்த நூல் தெளிவாக்குகிறது.

**திருவருட்பயன்**

சைவ சித்தாந்தத்தின் தத்துவங்களை விளக்கும் நூல். திருவருட்பயன் உமாபதி சிவாசாரியார் அருளியது. இந்நூல், ஒவ்வொன்றும் பத்துக் குறட்பாக்களால் ஆன பத்து அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது.

திருவருட் பயனின் அதிகாரங்கள் அவற்றின் உட் பொருள்களுக்கு ஏற்றவாறு பதிமுது நிலை, உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுறு நிலை, அறியு நிலை, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என பகுக்கப் பட்டுள்ளன.

**திருவுந்தியார்**

திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார் இந் நூலை இயற்றினார். பதிபசு, பாசம் என்பவற்றின் இயல்புகளைப் பற்றியும், உயிர்கள் இறைவனுடன் சேருவதற்கான வழிகளைப் பற்றியும் எடுத்து இயம்புகிறது.

**வினா வெண்பா**

இது பதின்மூன்று நேரிசை வெண்பாக்களால் ஆகியது. இதில் ஆசிரியர், உமாபதி சிவம் தனது குருவாகிய ஞானாசிரியர் மறைஞான சம்பந்தரிடம் சாத்திர உண்மைகளான இறைவனையும், ஆன்ம சொருபத்தைப் பற்றியும், தனக்குள் இறைசக்தி எவ்வாறு தன்னை வெளிப்படுத்தி நடத்துகின்றது எனபன பற்றியும் கேட்டுத் தெளியும் முறையில் அமைந்தது. ஜீவன், முக்தி அடைவதற்கான தன்மைகளை விளக்குவதோடு எத்தன்மையுடையோர் வீடு பேற்றினை அடைய முடியும் என்பதையும் விளக்குகின்றன இப்பாடல்கள். முக்தியாகிய நித்திய இன்பத்தை பெறுகின்றவர், 'காண்பானாகிய' தான் எனும் ஆன்மா, 'காட்டுவான்' ஆகிய இறைவன், 'காணப்படும் பொருள்' ஆகிய மூன்று தத்துவங்களிலிருந்து விலகி பரம்பொருளோடு இரண்டறக் கலந்திருப்பர். இதுவே வீடுபேறு என்கின்றது வினா வெண்பா .

**போற்றிப் பஃறொடை**

போற்றிப் பஃறொடை சைவ சித்தாந்த நூல்களுள் ஒன்று. இது, 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் உமாபதி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. 196 அடிகளைக் கொண்டு அமைந்த இந் நூல் மூலமாகத் தன்னுடைய குருவான மறைஞான சம்பந்தரை சிவ பரம்பொருளாக எண்ணிப் போற்றிப் பாடியுள்ளார் உமாபதியார்.

**நெஞ்சு விடு தூது**

நெஞ்சு விடு தூது என்னும் இந்நூலின் ஆசிரியர் உமாபதி சிவம். சாத்திர நூல்களுள் இதுவே சிற்றிலக்கிய வகையாகிய தூது வகையில் அமைந்ததுள்ளது. இந்நூலில் ஆசிரியர் உமாபதி சிவம் தமமுடைய ஞான ஆசிரியர் ஆகிய மறைஞானசம்பந்தரிடம் தமது நெஞ்சைத் தூதாக விடுத்து அவரிடத்திவிருநது திருக்கொன்றை மாலையை வாங்கி வருமாறு கேட்பதாக அமைந்துள்ளது.

இறைவனின் இயல்பு, உயிரின் சிறுமை, உயிரைப் பற்றியிருக்கும் தளைகள், நெஞ்சக்கு அறிவுறுத்தல், சிவபெருமானின் ஒப்பற்றத் தன்மை, நெஞ்சு சேரக் கூடாத இடங்கள் ஆகியன நூற்று இருபத்து ஒன்பது கண்ணிகளால் விளக்கப்படுகின்றன. இந்நூல் கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

**உண்மை நெறி விளக்கம்**

உண்மை நெறி விளக்கம், தமிழில் எழுதப்பட்ட சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்று. சைவ சித்தாந்தத்தை விளக்கும் இன்னொரு நூலான சிவப்பிரகாசத்தில் குறிப்பிடப்பட்ட தசகாரியம் என்பது பற்றி விரிவாக விளக்குவதே இந் நூலின் நோக்கமாகும். இதில் ஆறு பாடல்கள் உள்ளன. இந் நூலை எழுதியவர் உமாபதி சிவாச்சாரியார்.

**சங்கற்ப நிராகரணம்**

சங்கற்ப நிராகரணம் என்பது உமாபதி சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட ஒரு நூலாகும். இது சைவ சித்தாந்த நூல்களுள் ஒன்று. இது சைவ சித்தாந்தத்துக்கு நெருக்கமான, அகச் சமயத் தத்துவங்களை மறுத்து எழுதப்பட்டது.

ஈசுவர அவிகார வாதம், ஐக்கிய வாதம், சங்கிராந்த வாதம், சிவசம வாதம், சைவ வாதம், நிமித்தகாரண பரிணாம வாதம், பாடாண வாதம், பேத வாதம், மாயா வாதம் என்னும் ஒன்பது சமயவாதங்கள் மறுக்கப்பட்டுச் சைவ சித்தாந்தம் நிலைநாட்டப்படுகிறது.

**கொடிக்கவி**

கொடிக்கவி உமாபதி சிவாச்சாரியார் எழுதிய நூலாகும். இது மிகச் சிறிய நூல்; நான்கு வெண்பாக்களால் ஆகியது. ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் என்ற பகுதி இன்புறத்தக்கது. ஐந்தெழுத்தின் நுட்பம் இறுதி வெண்பாவிற் குறிக்கப்பட்டுள்ளது. இது தில்லையிற் கொடியேறும் பொருட்டுப் பாடிய நூலாதலின், "கொடிக்கவி" எனப்பெயர் பெற்றது.

கொடிக்கவி என்னும் இந் நூல் மெய்க்கண்ட சாத்திரங்களுள் பதினொன்றாவதாக வைத்து எண்ணப்படுவது. இது மொத்தம் நான்கு பாடல்கள் சிவப்பேறு பற்றி மறைமுகமாக உணர்த்தி சைவ சித்தாந்தத்தின் உட்கருத்தை இந்நூல் விளக்குகிறது.

ஆலயங்களில் கும்பாபிஷேகங்களின் போதும் மற்ற திருவிழாக்களின் போதும் நடைபெருகின்ற ஒரு முக்கியச் சடங்கு கொடியேற்றம்.

இச்சடங்கின் உட்பொருளை மிக அழகாக சைவ ஆகமத் தத்துவங்களைப் புகுத்தி ஐந்தே பாடல்களில் விளக்குகின்றார் நூலாசிரியர். திருவிழா சமயத்தில் ஆலயத்தில் கொடியேற்றம் செய்ய, அக்கொடி மேல் நோக்கி ஏறாமல் தடைபட்டுக் கொண்டே வர, அப்பொழுது இறைவனின் ஆணைப்படி உமாபதி சிவம் வந்தால்தான் கொடியேரும் என உணர்த்தப்பட, தில்லைவாழ் அந்தணர்கள் அவரை அழைத்து வருகின்றனர். அவரும் இச்செய்தியைக் கேட்டு, அக்கொடியேற்றத்திற்காக இப்பாடல்கள் ஐந்தினையும் பாடி கொடியினை ஏற்றி வைத்ததாக சைவ கதைகள் கூறுகின்றன. இந்நூல் வடிவில் சிறிதாக இருப்பினும், சைவ சித்தாந்தத்தின் மூலக் கருத்துக்களை வெளிப் படுத்தும் வகையில் அமைந்து பெருமை சேர்க்கின்றது. முக்கியமாக, இறையாகிய பதியும், ஆசைகளுக்கு மூலமான பாசமும் இவை இரண்டும் இருக்கின்ற இடம் பசுவாகிய உயிரினிடத்தில்தான். உயிர் உலகியல் இன்பங் களில் ஈர்க்கப்பட்டு கீழ் நோக்கிச் செல்லாமல், பதியை நோக்கி மேலே செல்ல வேண்டும் என்பதை உணர்த்த இந்தக் கொடியைக் கட்டுகின்றேன் என ஆசிரியர் பாடுகின்றார்.

ஓம் எனும் மூல மந்திரத்திலிருந்து எழுகின்ற ஐந்தெழுத்து மந்திரமாகிய நமசிவய மற்றும் அவற்றிலிருந்து எழுகின்ற மற்ற பல மந்திர அட்சரங்கள், அவற்றிலிருந்து உருவாகும், ஒலிகள், மொழிகள், இவற்றையும் கடந்த மௌன நிலை ஆகிய அனைத்தும் உயிரோடு கலந்திருக்கின்ற பரம்பொருளையே உணர்த்து கின்றன என்கின்றார்.

இறைசக்தி எல்லையற்ற கருணை கொண்டது. உயிர்கள் மலங்கள் நீங்கி தெளிவு பெற்று, அந்த தெளிந்த அறிவுடனே மாறாமல் இருக்கின்ற நிலையே சிவப்பேறு. இக்கருத்துக்களையே இக்கொடியேற்றம் மறைமுகமாக விளக்குகின்றது என்கின்றது இந்நூல்.

**நிறைவாக**

சைவ சித்தாந்தம் என்பது, சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு, வேதங்கள் மற்றும் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் ஒரு தத்துவப் பிரிவாகும். சைவ சித்தாந்தத்தின் சாராம்சமாக "சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை" சித்தாந்தம் எனும் சித்தாந்தம் விளங்குகிறது. ஆன்மா, இறைவன், உலகம் ஆகிய முப்பொருள் தத்துவங்களையும் விளக்குகிறது.

சைவ சித்தாந்த நூல்கள் வீடுபேற்றினை அடைவதற்கான நான்கு வழி நிலைகளைக் கற்பிக்கிறது.

கோயிலைச் சுத்தம் செய்தல், சிவனின் உருவத்திற்கு மலர் மாலைகள் நெய்தல், சிவபெருமானைப் புகழ்தல் போன்ற பல்வேறு வழிகளில் சிவ பக்தர்களுக்கு சேவை செய்தல் போன்றவை தசாமார்க்கம் கற்பிக்கிறது. இது தொண்டு நெறி என்றும் அழைக்கப்படுகிறது.

சத்புத்திரமார்க்கம் சைவ சமயத்தில் ஒரு முக்கிய வழிபாட்டு நெறி ஆகும். இது இறைவனை மகனாகப் பாவிக்கும் ஒரு வழிபாட்டு முறையாகும். ஒரு உண்மையான மகனின் வழி, பூஜை தயாரித்து தியானம் செய்வதன் மூலம் தனிப்பட்ட பக்தியை வழங்குதலை சத்புத்திர மார்க்கம் வழங்குகிறது.

சகமார்க்கம் என்பது சைவ சமயத்தில் இறைவனை அடைவதற்கான ஒரு முக்கியமான வழி, தோழமை மற்றும் யோக நெறி மூலம் இறைவனுடன் இணைந்து வாழும் ஒரு முறையாகக் கருதப்படுகிறது. சகமார்க்கம், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு நிலைகளிலும் விரிவடைந்து பதினாறு படியாக அமைகிறது. சகமார்க்கம் யோகா பயிற்சி மூலம் பக்தியை வழங்குகிறது.

உண்மை மற்றும் யதார்த்தத்தின் வழியாகிய உயர்ந்த வழியின் மூலம் கடவுளைப் பற்றிய அறிவையும் பக்தியையும் வழங்கி வீடுபேற்றின் பேரின்பத்தை அனுபவித்து கடவுளுடன் ஒன்றுபடுதலை சன்மார்க்கம் கற்பிக்கிறது.

**பார்வை நூல்கள்**


- ♦ இலக்கண விளக்கம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973
- ♦ இறையனார் அகப்பொருள் (களவியல்), தெய்வப் புலமை நக்கீரனார் அருளிய உரையுடன், கழகம், சென்னை, 1935.
- ♦ சைவ சமய வரலாறு, ந.சி. கந்தையா, சந்தியா பதிப்பகம், 2010
- ♦ சைவ சித்தாந்த சாத்திர வரலாறு, க. வெள்ளைவாரணனார், ராமையா பதிப்பகம், 2016
- ♦ சைவ சித்தாந்த விளக்கம், ஆ. ஆனந்த ராசன், நர்மதா பதிப்பகம், 2017
- ♦ சைவசித்தாந்த வரலாறு, அனவரத விநாயகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2006
- ♦ தொன்னூல் விளக்கம், (பதி.), டாக்டர் ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.
- ♦ நம்பி அகப்பொருள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1966.
- ♦ மெய்கண்டார் அருளிய சிவஞான போதம், சிவ.மு. பாலசுப்பிரமணியன், 2010
- ♦ Tholkappiam (in English) with Critical studies, S. Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai, 1963.